**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.223/2022**

வாதி தரப்பு 1 வது சாட்சி பாண்டியன் என்பவரின் வாக்குமூலம் (1869 ம் ஆண்டு சாட்சியசட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.எம்.சுமதி, மொழிபெயர்ப்பாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | |
|---|---|
| பெயர் : பாண்டியன் | சாதி : |
| தகப்பனார் பெயர் : வெள்ளைசாமி | சமயம் : இந்து |
| கிராமம் : திருநகர் | தொழில் : வியாபாரம் |
| தாலுகா : திருப்பரங்குன்றம் | வயது : 63 |

நாள் : 26.04.2024.

வா.சா.1

**முதல் விசாரணை:** நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. 22.06.2021 ம் தேதியிட்ட வாதிக்கு ரூ.16 லட்சத்திற்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த புரோ நோட்டு அசல் வா.சா.ஆ.1.